கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
கலை கலாசார பீடம், புவியியற்றுறை
மூன்றாம் வருடம் இரண்டாம் அரையாண்டு சிறப்புக்
கலைமாணித் தேர்வு 2013/2014 (August 2018)

| GYS 3213 | புவியியலில் ஆய்வு நுட்பங்கள்<br>(Research Techniques in Geography) | நேரம் 03 மணித்தியாலங்கள் |
|---|---|---|

- பகுதி – I இல் இருந்து எவையேனும் இரு வினாக்களையும் பகுதி – II இல் இருந்து எவையேனும் மூன்று வினாக்களையும் தெரிவுசெய்து எல்லாமாக **ஐந்து** (05) வினாக்களுக்கு விடை தருக.
- பொருத்தமான இடங்களில் விளக்கப்படங்களின் துணையுடன் விடையளிக்குக.
- எழுத்துக்கள், படங்கள் தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.

## பகுதி - I

1) அ. ஆய்வு என்பதனால் கருதப்படுவது யாது?
(03 புள்ளிகள்)

ஆ. ஆய்வின் வகைகளைக் குறிப்பிட்டு, அவற்றுள் யாதேனும் இரண்டினது பண்புகளைப் பற்றி சுருக்கமாகத் தருக.
(07 புள்ளிகள்)

இ. ஆய்வினுடைய முக்கியத்துவம் குறித்து கருத்துரைக்குக.
(10 புள்ளிகள்)

2) அ. ஆய்வுச் செயன்முறையினை படிமுறையாகத் தருக.
(03 புள்ளிகள்)

ஆ. ஆய்வுப் பிரச்சினை ஒன்றினை தெரிவு செய்வதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் யாதெனக் குறிப்பிட்டு, விளக்குக.
(07 புள்ளிகள்)

இ. ஆய்வுப் பிரச்சினை ஒன்றிற்கான தலைப்பினை விருத்தி செய்து, அதனடிப்படையில் குறித்த நோக்கத்தை எட்டுவதற்கு ஏற்றவாறு மிகத் தெளிவான ஆய்வு முறையியலை முன்வைக்குக.
(10 புள்ளிகள்)

3) அ. தரவுகளை எவ்வாறு பாகுபடுத்தலாம்? பல்வேறுபட்ட தரவு சேகரிப்பு முறைகளை பட்டியல் படுத்தி சுருக்கமாக விளக்குக.
(06 புள்ளிகள்)

ஆ. முதன்நிலைத் தரவு சேகரிப்பின் போது பயன்படுத்தப்படும் வினாக்கொத்துக்கள் கொண்டிருக்கவேண்டிய முக்கிய அம்சங்களைக் குறிப்பிடுக.
(06 புள்ளிகள்)

இ. ஆய்வொன்றினை மேற்கொள்ளும் போது பயன்படுத்தப்படும் முதன்மைத் தரவுகள் (Primary data) இரண்டாம்நிலைத் தரவுகள் ஆகியவற்றின் (Secondary data) சிறப்பியல்களை ஒப்பிட்டு விளக்குக.
(08 புள்ளிகள்)

## பகுதி - II

4) பண்புசார் ஆய்வு என்பதனை விளக்கி, அதற்கான தரவு சேகரிப்பு முறைகள் குறித்து உதாரணங்களுடன் ஆராய்க.

(20 புள்ளிகள்)

5) நீர் விரும்பிய ஆய்வுத் தலைப்பு ஒன்றினைத் தெரிவு செய்து, அதற்கான ஆய்வு முன்மொழிவினை (Research Proposal) எழுதுக.

(20 புள்ளிகள்)

6) புவியியல் ஆய்வுகளில் புள்ளியியல் நுட்பங்கள் எந்தளவுக்கு உள்வாங்கப்பட்டிருக்கின்றன என்பதனை உதாரணங்கள் வாயிலாக விளக்குவதுடன் தரவுப் பகுப்பாய்வில் SPSS மென்பொதி, அவற்றின் பிரயோகங்களுக்கு எவ்வகையில் துணைபுரிகின்றன என்பதனை மதிப்பிடுக.

(20 புள்ளிகள்)

7) பின்வருவனவற்றினுள் எவையேனும் இரண்டினிற்கு சிறு குறிப்பு எழுதுக.

அ. SWOT பகுப்பாய்வு

ஆ. ஆய்வுப் பகுப்பாய்வுக்கான மென்பொருட்கள்

இ. அளவைசார் ஆய்வு வடிவம் (Quantitative research design)

(2 x 10=20 புள்ளிகள்)